<u>பத்திரிகைச்செய்தி குறிப்பு</u>

# ஓய்வூதிய பலன்களை வழங்க ரூ.30,000/- லஞ்சம் கேட்டு பெற்ற அரசு மருத்துவமனை இளநிலை உதவியாளர் கைது.

சென்னையை சேர்ந்த புகார்தாரர் டாக்டர் R.சங்கர், B.Sc, MBBS, வயது-61, த/பெ. Dr.ரங்கன், S1, Flat, பிரைம் ரோஸ் அப்பார்ட்மென்ட், 28th தெரு, K.S.நகர், காவாங்கரை, சென்னை-66 என்ற முகவரியை சேர்ந்த புகார்தாரர் 2005-ம் ஆண்டு முதல் பல அரசு மருத்துவனையில் பணிபுரிந்து கடந்த 31.07.2022-ம் தேதி திருவள்ளூர் மாவட்டம் புலிகேட் அரசு மருத்துவமனையில் சீனியர் அசிஸ்டன்ட் சர்ஜனாக பணிபுரிந்து ஒய்வு பெற்றார். மேலும் புலிகேட் அரசு மருத்துவமனையில் பணிபுரியும் பணியாளர்களின் சம்பளம் மற்றும் ஓய்வு ஊதியம் பணப்பயன்களை பெற்றுத்தரும் பணியினை பொன்னேரி அரசு மருத்துவமனையின் நிர்வாக பிரிவில் பணிபுரியும் இளநிலை உதவியாளர், திரு.லோகேஷ்பாபு, ஆ/வ 40 என்பவர் கவனித்து வருகிறார். இவர் புகார்தாரரின் ஈட்டியவிடுப்பு பில்லை தயார்செய்து பொன்னேரி சார் கருவூலத்திற்கு அனுப்பி இருப்பதாகவும், அந்த பணம் புகார்தாரரின் வங்கி கணக்கிற்கு வந்த உடன் தனக்கு லஞ்சமாக ரூ. 30,000/-ம் கொடுத்துவிடவேண்டும் என்று கூறியுள்ளார். மேலும் புகார்தாரரின் ஈட்டியவிடுப்பு பணம் ரூ. 9,78,328/- வங்கி கணக்கில் வந்த உடன் புகார்தாரர் இளநிலை உதவியாளர் திரு.லோகேஷ்பாபு அவர்களை தொலைபேசியல் தொடர்புகொண்டு தனக்கு ஈட்டியவிடுப்பு பணம் வந்த விவரத்தினை தெரிவித்து மீதி நிலுவையில் உள்ள CPS மற்றும் மூன்று மாத நிலுவை பணத்தை பெற்றுத்தருமாறு கேட்டபோது, எதிரி திரு.லோகேஷ்பாபு, அவர்கள் நான் ஏற்கனவே லஞ்சமாக கேட்ட ரூ.30,000/-த்தை தரவேண்டும் என்றும், அவ்வாறு பணம் கொடுத்தால்தான் அடுத்த பில்களை தயார் செய்து கருவூலத்திறக்கு அனுப்புவேன் என்றும், அவ்வாறு பணம்கொடுக்காவிட்டால் பில்களை நிறுத்திவிடுவேன் என்று கராறாக கூறிவிட்டார். மேலும் புகார்தாரரை தொடர்ந்து பலமுறை தொலைபேசியல் தொடர்பு கொண்டு லஞ்சமாக ரூ.30,000/-ம் தரவேண்டும் என்று வற்புறுத்தியதின் பேரில் புகார்தாரர் 28.03.2023 அன்று திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தை அனுகி அளித்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து இன்று 29.03.2023-ஆம் தேதி மேற்படி லஞ்சபணம் ரூ.30,000/-தை புகார்தாரர் எதிரியிடம் கொடுக்க சென்ற போது திரு.லோகேஷ்பாபு, அவர்கள் அங்கு பணியில் இருந்த தற்காலிக ஊழியர் திரு.N.ரமேஷ், (Consolidate Pay) என்பவரை அழைத்து வந்து அவரிடம் லஞ்சப்பணம் ரூ.30,000/-த்தை கொடுக்குமாறு கூறியதின் பேரில் புகார்தாரர் அப்பணத்தை கொடுக்கும்போது திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட பொறி வைப்பு நடவடிக்கையில் கைது செய்யப்பட்டு சிறைக்காவல் செய்ய வேண்டி முதன்மை குற்றவியல் நடுவர், திருவள்ளூர் அவர்கள் முன் ஆஜர் செய்யப்பட்டார்.

**PRESS NOTE**

# GOVERNMENT HOSPITAL JUNIOR ASSISTANT ARRESTED FOR DEMAND AND ACCEPTANCE OF BRIBE OF RS.30,000/- FOR PROCESS RETIREMENT BENEFITS

Dr.R.Sankar, the complainant is residing at Prime Rose Apartment, 28th Street, K.S.Nagar, Kavankarai, Chennai. The complainant retired on 31.07.2022 at Government Hospital, Thiruvallur District as Senior Assistant Surgeon. In this regard after retirement, the retirement benefits bills were prepared for claim from the by Government Hospital, Ponneri, Thiruvallur District. Tr.Lokesh Babu, Junior Assistant is the incharge for the bill settlement. Tr.Lokesh Babu, Junior Assistant, prepared the Surrender Leave bill for Rs.9,78,328/- and he demanded Rs.30,000/- for processing the bill at Treasury, Thiruvallur. The bill was passed and the said amount was credited to complainant bank account. Later the complainant approached Tr.Lokesh Babu, Junior Assistant, for getting CPS amount. Tr.Lokesh Babu, asked to the complainant to settle the bribe amount of Rs.30,000/- for getting the surrender leave amount and only then he would process for CPS bill. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Thiruvallur detachment and gave complaint on 28.03.2023. In this connection a case was registered and a trap was organized. Today 29.03.2023, during the trap proceedings, on the instructions of Tr.Lokesh Babu, Junior Assistant, Tr.N.Ramesh, Temporary Staff, received the bribe amount of Rs.30,000/- from the complainant. Both the accused were arrested and sent for remand.